
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JULY 29 2025

செவ்வாய்க்கிழமை 29, ஜூலை 2025 | ஒளி: 10 கதிர் 293 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



# 9 வாகனங்களை பந்தாடிய கிரேன்

**ஒருவர் பலி; ஏழுபேர் காயம்: கஞ்சா சாரதி கைது**

பொரளை கனத்தை சுற்று வட்டத்திற்கு அருகில் திங்கட்கிழமை (28) காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். ஏழுபேர் காயமடைந்தனர்.

சம்பவத்தை அடுத்து கிரேன் ஓட்டுநர் கைது செய்யப்பட்டார். அவர், சம்பவத்தின் போது கஞ்சா போதையில் இருந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

ராஜகிரியவிலிருந்து பௌத்தலோக மாவத்தை நோக்கிச் சென்ற கிரேன், ஆறு மோட்டார் சைக்கிள்கள் மற்றும் போக்குவரத்து சிக்னலில் நிறுத்தப்பட்டிருந்த மூன்று வாகனங்கள் மீது மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

காயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

தொடர்ச்சி P2

## இனிய பாரதியின் சகா ‘தொப்பி மனாப்’ கைது

*கனகராசா சரவணன், பாறுக் ஷிஹான்*



இனிய பாரதியின் சகாவான ‘தொப்பி மனாப்’ என்றழைக்கப்படும் முன்னாள் திருக்கோவில் பிரதேச சபை உறுப்பினரான சி.விக்கினேஸ்வரன் ஞாயிற்றுக்கிழமை(27) மாலை குற்றப் புலனாய்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

தொடர்ச்சி P2

## நல்லூரானுக்கு இன்று கொடியேற்றம்



வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை (29) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இந்நிலையில்,கொடியேற்றத்துக்காக சம்பிரதாயப் பூர்வமாக கொடிச்சீலை எடுத்துவரும் நிகழ்வு திங்கட்கிழமை (28) அன்று நடைபெற்றது.

நிதர்ஷன் வினோத்

## ‘GovPay’ ஊடாக அபராதம் செலுத்தலாம்



மேல் மாகாணத்திலும், அதிவேக நெடுஞ்சாலைகளிலும் ‘Govpay’ செயலி மூலம் நேரடியாக அபராதம் செலுத்தும் முறை திங்கட்கிழமை (28) முதல் அமல்படுத்தப்படும் என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். இந்தத் திட்டம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தத் துறைமுக அமைச்சில்

தொடர்ச்சி P2

## 21/4 தாக்குதல்: ஹேமசிறி, பூஜிதவுக்கு எதிரான

# வழக்கு மீண்டும் வருகிறது

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு திங்கட்கிழமை (28) அன்று உத்தரவிட்டது.

உயிர்த்த ஞாயிறு அன்று பயங்கரவாத தாக்குதல் நடத்தப்பட உள்ளதாக புலனாய்வுத் தகவல்கள் கிடைத்தும், அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கத் தவறியதன் மூலம் குற்றவியல் கடமையை இழந்ததாக அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து விசாரிக்கப்பட்டு வந்தது.

இந்த வழக்கு மேல் நீதிமன்ற நீதிபதிகள் நாமல் பலல்லே மற்றும் முகமது இர்ஷதீன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு திங்கட்கிழமை (28) அன்று எடுத்துக்கொள்ளப்பட்ட போதே மேற்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.



## “எமது சமையற்கலைஞர்கள் மரபுரிமையின் தூதர்கள்”

“எமது சமையற்கலைஞர்கள் வெறும் சமையல் செய்பவர்கள் மட்டுமல்ல, அவர்கள் மரபுரிமையின் தூதர்களும் ஆவர். அவர்கள் பரிமாறும் ஒவ்வொரு உணவிலும், மணமூட்டும் பொருள், இடம் மற்றும் விருந்தோம்பலின் கதையை எடுத்துச் செல்கிறார்கள்" என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதிக்கு மாலைத்தீவில் செங்கம்பள வரவேற்பு

அரசுமுறை பயணத்தை மேற்கொண்டு மாலைத்தீவுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு செங்கம்பள வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.

மாலைத்தீவு ஜனாதிபதி கலாநிதி மொஹமட் முய்சுன் அழைப்பின் பேரில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மாலைதீவுக்கு விஜயம் செய்துள்ளார்.

ஜூலை 28ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரையான அரச விஜயத்தின் போது, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க,

மாலைத்தீவு ஜனாதிபதி உட்பட அந்நாட்டின் உயர்மட்டப் பிரதிநிதிகளுடன் இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளதுடன், இலங்கை - மாலைத்தீவு பரஸ்பர ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களை பரிமாறிக்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளன.

மேலும், இந்த அரச விஜயத்தின் போது ஜனாதிபதி, மாலைத்தீவின் இலங்கை உயர்ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்யும் வர்த்தக மன்றத்தை சந்தித்து, உரையாற்றவும் மற்றும் மாலைத்தீவில் வாழும் இலங்கையர்களைச் சந்திப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவினரும் இந்த அரச விஜயத்தில் கலந்துகொண்டுள்ளனர்.



## நாமலுக்கு பிடியாணை



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவுக்கு ஹம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றத்தால் திங்கட்கிழமை (28) அன்று பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஹம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு ஒன்று தொடர்பான விசாரணைகளுக்காக நீதிமன்றில் ஆஜராகாமல் இருந்தமையினால் அவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## “தோட்டத்தை தருகிறோம் நடத்திக்காட்டுங்கள்”

### ரொஷான் ராஜதுரை சவால்

*எம்.கிருஸ்ணா, எஸ்.சதீஸ்*

“பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு எங்களால் வழங்கக்கூடிய சம்பளத் தொகையை மட்டுமே எங்களால் கூற முடியும் மாறாக 2,000 ரூபாய் கொடுக்க வேண்டும், 2,500 ரூபாய் கொடுக்க வேண்டும் என கூறுபவர்கள் யாரும் பெருந்தோட்டங்களை கொண்டு நடத்துபவர்கள் அல்ல, ஆகவே, அவர்கள் எப்படி வேண்டுமானாலும் சம்பள விடயத்தைப் பற்றி எதுவும் பேசலாம்.

தொடர்ச்சி P2

## 48 மணிநேர வேலைநிறுத்தம்



ரயில் ஓட்டுநர்கள் இன்று செவ்வாய்க்கிழமை (29) நள்ளிரவு முதல் 48 மணிநேர அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக ரயில் இயந்திர ஓட்டுநர் சங்கம் தெரிவித்துள்ளது.

தவறான சமிக்ஞை அமைப்புகள் உட்பட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக இந்த அடையாள வேலை நிறுத்தம் தொடங்கப்படும் என்று தொழிற்சங்கத் தலைவர் கே.ஏ.யு.கொண்டசிங்க கூறியுள்ளார்.

இந்த அடையாள வேலை நிறுத்தம் காரணமாக நாடு முழுவதும் உள்ள அனைத்து ரயில்களும் நிறுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மாடியில் இருந்து விழுந்த பாதுகாப்பு அதிகாரி மரணம்



பாதுகாப்பு அதிகாரி ஒருவர் ஞாயிற்றுக்கிழமை (27) இரவு கட்டிடம் ஒன்றின் மேல் மாடியில் இருந்து விழுந்து உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வேளாண் பீடத்தில் பணியாற்றும் பாதுகாப்பு அதிகாரியே இவ்வாறு மரணமடைந்துள்ளார். இரண்டு மாடிக் கட்டிடத்தின் இரண்டாவது மாடியில் இருந்து பாதுகாப்பு அதிகாரி கீழே விழுந்ததாகவும், கட்டிடத்திற்கு அருகில் கிடந்த அவரது உடல் காலையில் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட தர்மசீலன் ரகுராஜ் (34) ஒரு தனியார் பாதுகாப்பு நிறுவனத்தால் பணியமர்த்தப்பட்டிருந்தார். விபத்துக்கான சூழ்நிலைகள் இன்னும் கண்டறியப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## முன்னாள் கடற்படை தளபதி

# நிஷாந்த கைது

முன்னாள் கடற்படை தளபதி நிஷாந்த உலுகேதென்ன குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரால் திங்கட்கிழமை (28) கைது செய்யப்பட்டுள்ளார்.

பொத்துஹேர பகுதியில் நபரொருவரை கடத்தி, கொலை செய்த சம்பவம் தொடர்பான விசாரனைகளுக்கமைய அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியில் சந்தேகநபரான நிஷாந்த உலுகேதென்ன கடற்படையின் புலனாய்வு பிரிவின் பிரதானியாக

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# இனிய பாரதியின் சகா ‘தொப்பி மனாப்’ கைது

அம்பாறை மாவட்டத்தின் சில பகுதிகளில் கடந்த காலத்தில் இனியபாரதி தலைமையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினரால் இயங்கி வந்த முகாம்கள் மற்றும் மயானங்களில் குற்றப் புலனாய்வு அதிகாரிகள் இரண்டு தினங்களாகக் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

அம்பாறை திருக்கோவில் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் உதயகுமார் துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் உட்பட 2005 மற்றும் 2008க்கு இடையில் கிழக்கு மாகாணத்தில் நடந்த கொலைகள், கடத்தல்கள், காணாமல் போனோர், துப்பாக்கிகளை பயன்படுத்துதல், சித்திரவதைக் கூடங்கள் நடத்துதல், மிரட்டி பணம் பறித்தல் போன்ற சம்பவங்களுடன் தொடர்புடைய ரி.எம்.வி.பி. கட்சியைச் சேர்ந்த இனியபாரதி என அழைக்கப்படும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே.புஷ்பகுமார் மற்றும் அவரது சகாவான சசீந்திரன் தவசீலன் ஆகியோரை கடந்த 6ஆம் திகதி திருக்கோவில் மற்றும் சந்திவெளி பகுதிகளில் வைத்து குற்றப் புலனாய்வாளர்கள் கைது செய்திருந்தனர்.

இந்த கைதையடுத்து, இனியபாரதி யின் முன்னாள் சாரதியான செந்தூரன் கடந்த 9ஆம் திகதி பொத்துவிலில் இருந்து மட்டக்களப்புக்கு தனியார் போக்குவரத்து பேருந்தைச் செலுத்திச் சென்ற போது கல்முனை நகரில் வைத்துக் குற்றப் புலனாய்வாளர்கள் அவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் சனிக்கிழமை (26) பிற்பகல் 2 மணிக்கு கொழும்பில் இருந்து வந்த குற்றப் புலனாய்வாளர்கள் தம்பிலுவில் மகா வித்தியாலயத்திற்கு அருகில் பாடசாலை வீதியில் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் இயங்கி வந்த இனியபாரதி யின் காரியாலயத்தை முற்றுகையிட்டு சோதனையில் ஈடுபட்டனர்.

இவ்வாறு தம்பிலுவில் பிரதான வீதியில் இயங்கி வந்த ரி.எம்.வி.பி. முகாம், தம்பட்டையில் இயங்கி வந்த முகாம், திருக்கோவில் மயானம் போன்றவற்றுக்கு சென்று சோதனையில் ஈடுபட்டனர். கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவில் அமைந்துள்ள தாளவெட்டுவான் சந்திக்கு அருகாமையில் உள்ள வீட்டில் ஏற்கனவே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்களை வெள்ளை நிற ஆடை அணிந்து இரண்டு வெவ்வேறு ஜீப்களில் அழைத்து வந்து சோதனை செய்தனர்.

இதன் பின்னர் சம்மாந்துறையில் செயற்பட்ட முகாம் உட்பட அந்த கால பகுதியில் அம்பாறை மாவட்ட தமிழ் பிரதேசங்களில் ரி.எம்.வி.பி. முகாம்களாக செயற்பட்ட இடங்களுக்கு சென்று சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு, அங்கு சந்தேகத்துக்கு இடமாக அடையாளப்படுத்தப்பட்ட பகுதிகளின் நிலத்தைத் தோண்டி சோதனையிடுவதற்கு நீதிமன்ற அனுமதியை பெறுவதற்கான நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியைச் சேர்ந்த இனிய பாரதியின் மற்றும் ஒரு சகாவான திருக்கோவில் விநாயக புரத்தைச் சேர்ந்த முன்னாள் பிரதேச சபை உறுப்பினரான தொப்பி மனாப் என்றழைக்கப்படும் சின்னத்தம்பி விக்கினேஸ்வரன் அவரது வீட்டில் வைத்து ஞாயிற்றுக்கிழமை (27) மாலை குற்றப் புலனாய்வாளர்கள் கைது செய்து கொழும்புக்கு விசாரணைக்காகக் கொண்டு அழைத்துச் சென்றுள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# 9 வாகனங்களை பந்தாடிய கிரேன்



காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த அதுருகிரியவைச் சேர்ந்த 62 வயதுடையவர் உயிரிழந்துள்ளார்.

காயமடைந்தவர்களில் இரண்டு பெண்கள் மற்றும் ஐந்து ஆண்கள் அடங்குவர்.

கிரேனில் பிரேக் செயலிழந்ததே விபத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்று முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

# ‘GovPay’ ஊடாக அபராதம் செலுத்தலாம்

நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்றபோது அமைச்சர் இவ்வாறு கூறினார்.

தொடர்புடைய அபராதங்களில் எந்த மாற்றங்களும் செய்யப்படவில்லை என்றும், 33 அபராத விதிமீறல்களுக்கு ‘Govpay’ மூலம் நேரடியாக அபராதம் செலுத்தலாம் என்றும் அமைச்சர் கூறினார். இந்த முறை காரணமாக, அபராதம் செலுத்தும் நபர் தபால் நிலையங்களுக்குச் செல்ல வேண்டியதில்லை என்றும் அமைச்சர் கூறினார்.

தொடர்புடைய அபராதம் செலுத்தும் முறையை வெற்றிகரமாக மாற்றுவதற்காக பொலிஸ் அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாகக் கூறிய அமைச்சர், தொடர்புடைய "செயலில்" இருந்து அபராதத்தைப் பெறக்கூடிய போக்குவரத்து பொலிஸ் அதிகாரிகளுக்கு 1,000 அலைபேசிகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

டிஜிட்டல் விவகார அமைச்சின் உறுதிப்பாட்டின் காரணமாக இந்தப் பணி மிக விரைவில் தொடங்க முடிந்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார். அடுத்த சில மாதங்களுக்குள் மற்ற பொலிஸ் நிலையங்களுக்கும் அலைபேசிகளை வழங்க முடியும் என்று நம்புவதாக அமைச்சர் கூறினார்.

இது தொடர்பாக டிஜிட்டல் அமைச்சகம் காவல்துறை அதிகாரிகளுக்குப் பல பயிற்சித் திட்டங்களை வழங்க உள்ளது, மேலும் இந்த செயல்முறை ஆகஸ்ட் 4 ஆம் திகதிக்கு முன்னர் மேல் மாகாணத்தில் முழுமையாகச் செயல்படுத்தப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

# நிஷாந்த கைது

செயற்பட்டதுடன் கடத்தப்பட்ட நபர் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக கூறப்படும் சட்டவிரோத தடுப்பு முகாம் அவரது கண்காணிப்பில் செயற்பட்டுள்ளமை பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கடத்தப்பட்ட நபர் பல நாட்களுக்கு பின்னர் சட்டவிரோத தடுப்பு முகாமிலிருந்து அனுப்பிய கடிதத்தை அடிப்படையாகக்கொண்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பில் இதற்கு முன்னர் சில சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# “எமது சமையற்கலைஞர்கள் மரபுரிமையின் தூதர்கள்”

கொழும்பில் உள்ள சின்னமன் லைஃப் ஹோட்டலில், ஞாயிற்றுக்கிழமை (27) நடைபெற்ற SIRHA BOCUSE D’OR இலங்கை 2025 விருது வழங்கும் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போது இக்கருத்துகளை குறிப்பிட்டார்.

மேலும் பிரதமர் கூறியதாவது,

“இது வெறும் உணவைப் பற்றியது அல்ல. இது சிறப்பைப் பற்றியது, மரபுரிமை பற்றியது, அடையாளம் பற்றியது. இலங்கைக்கு, இந்த உலகளாவிய பயணத்தில் எமது பங்கேற்பு, சமையல் கௌரவத்தை விடவும் அதிகமானது.

இது சர்வதேச உரையாடலின் மையத்தில் நம்மை நிலைநிறுத்துவதாகும். அது படைப்பாற்றல், கைவினை மற்றும் கலாச்சார வெளிப்பாடு பற்றிய உரையாடலாகும். 2011 முதல், நாங்கள் முதன்முதலில் எங்கள் சமையல் தூதர்களை உலக அரங்கிற்கு அனுப்பியதிலிருந்து, எமது பயணம் அர்ப்பணிப்பு, தொலைநோக்கு மற்றும் எமது உள்ளார்ந்த ஆற்றல் பற்றிய வலுவான நம்பிக்கையால் குறிக்கப்பட்டுள்ளது.

இந்த மேடையில் இலங்கையின் பிரசன்னம் தற்செயலானது அல்ல. இது எமது விருந்தோம்பல் துறையின் முன்னேற்றம், எமது சமையல் கல்வி மற்றும் எமது தேசிய குறிக்கோளைப் பிரதிபலிக்கிறது.

இலங்கையில் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முக்கியமான பொருளாதாரத் துறைகள் மட்டுமல்ல. அவை நாம் யார் என்பதன் பலம் வாய்ந்த வெளிப்பாடுகளும் ஆகும். ஒவ்வொரு மறக்க முடியாத உணவு அனுபவமும், அது ஒரு சொகுசு ஹோட்டலில் பரிமாறப்பட்டாலும் அல்லது எளிய உள்ளூர் உணவகத்தில் பரிமாறப்பட்டாலும், எமது அடையாளத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதேவேளை, உலகளாவிய நற்பெயரை உருவாக்குவதோடு மக்களுக்கும் கலாச்சாரங்களுக்கும் இடையே அர்த்தமுள்ள தொடர்புகளை உருவாக்குகிறது.

இலங்கைக்கு, Bocuse d’Or ஒரு பிரதிபலிப்பும் வழிகாட்டியும் ஆகும். நாம் எவ்வளவு தூரம் வந்திருக்கிறோம் என்பதை இது காட்டுகிறது, அதே போன்று எமது முன்னோக்கிய பாதையை வடிவமைக்க உதவுகிறது. எமது பங்கேற்பு தரங்களை உயர்த்தியுள்ளது, உலகளாவிய குறிக்கோளை ஊக்குவித்துள்ளது மற்றும் புதிய தலைமுறை இலங்கை விருந்தோம்பல் நிபுணர்களிடையே சிறப்புத் தன்மை பற்றிய உணர்வை ஊக்குவித்துள்ளது.

பாரம்பரியமாக ஆண்களின் ஆதிக்கத்தில் இருந்த ஒரு துறையில் இவ்வளவு பெண் சமையற்கலைஞர்கள் பங்கேற்பதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இலங்கையின் சமையல் துறையில் வலுவான பெண் தலைமைத்துவம் வளர்ந்து வருவதைக் காண்பது ஊக்கமளிக்கிறது.” என்றார்.

விழாவின் போது, சின்னமன் லைஃப் ஹோட்டலுக்கு தங்கப் பதக்கமும், ஷங்கிரி-லா ஹோட்டலுக்கு வெள்ளிப் பதக்கமும், ஷெரட்டன் ஹோட்டல் கொழும்புக்கு வெண்கலப் பதக்கமும் வழங்கப்பட்டன என்றார்.

# “தோட்டத்தை தருகிறோம் நடத்திக்காட்டுங்கள்”

அவ்வாறு பேசுபவர்கள் யாராவது முன் வந்தால் நாங்கள் ஒரு தோட்டத்தைத் தருகிறோம் அவர்களை அதை நடத்தி அவர்கள் கூறும் சம்பள தொகையைக் கொடுத்து தோட்டத்தை நடத்திக் காட்டட்டும் இதை சவாலாகவே அறிவிக்கிறேன்” என ஹேலிஸ் பெருந்தோட்ட நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் ரொஷான் ராஜதுரை தெரிவித்துள்ளார்.

ஹேலிஸ் நிறுவனத்தின் கீழ் இயங்கும் களனிவெளி, தலவாக்கலை மற்றும் ஹொரண பெருந்தோட்ட கம்பனிகளில் கடமையாற்றும் உத்தியோகஸ்தர்களில் போட்டிகளினூடாக தெரிவு செய்யப்பட்ட உத்தியோகஸ்தர்களுக்கு பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு ஹட்டன் பிரின்ஸ் மண்டபத்தில், திங்கட்கிழமை (28) அன்று நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது,

“இன்று எங்களுடைய கம்பனியின் கீழுள்ள மூன்று பெருந்தோட்டங்களில் சிறப்பாக நிர்வாகத்தை நடத்தும் உத்தியோகத்தர்களை அடையாளம் கண்டு ஊக்குவிக்கிறோம் அதே போல, கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கொழுந்து பறிக்கும் தொழிலாளர்களை போட்டிகள் வைத்து அவர்களை ஊக்கப்படுத்திக் கௌரவித்தோம்.

ஆட்சியமைக்கும் எந்த கட்சியின் அரசாங்கம் என்றாலும் நாங்கள் அவர்களிடத்தில் எங்களுடைய தொழில் துறை தொடர்பாக எடுத்துறைப்போல, அவ்வாறே இப்போதைய அரசாங்கத்திடமும் பேசியிருக்கிறோம்.

சம்பளம் தொடர்பாகப் பல பேச்சுவார்த்தைகளின் பின்னர் 1,350 ரூபாய் வழங்க ஏற்றுக்கொண்டோம். ஆனால், அரசாங்கம் நிர்வகிக்கும் தோட்டங்களில் கூட சம்பளம் வழங்க முடியாத நிலையில் இருக்கிறது.

ஏனைய தொழில் நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் நாங்கள் வழங்கும் சம்பள தொகைக்கு குறைவான சம்பளத்தையே அவர்கள் வழங்குகின்றனர்.

எமது அயல் நாடான இந்தியாவை எடுத்துக்கொண்டால் எம்மை விட தேயிலை உற்பத்தி அதிகம் இடம்பெறுகிறது. ஆனால் அங்கே சுமார் 700 ரூபாய் வரையில் சம்பளம் வழங்கப்படுகிறது.

எனவே, அதிக சம்பள தொகையை வழங்க வேண்டும் என கூறுபவர்கள் முன்வாருங்கள் நாங்கள் தோட்டம் ஒன்றைத் தருகிறோம் நடத்திக் காட்டுங்கள் நீங்கள் கூறும் சம்பள தொகையைக் கொடுங்கள் எங்களுக்கும் கற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும் இதைச் சவாலாகக் கூறுகிறேன். எங்களுக்கும் அதிக சம்பள தொகையைக் கொடுக்கவே விருப்பமாக உள்ளது அதற்கு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் அப்போதே அது சாத்தியமாகும்” என்றார்.

## ஆரையம்பதியில் வாள் வெட்டு:

# ஒரு வயது குழந்தையும் அவரது தாயும் படுகாயம்

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேசத்தில் வீடு ஒன்றில் உறவினருக்கு எற்பட்ட வாய்த்தர்க்கத்தையடுத்து பெண் ஒருவர் மீது மேற்கொண்ட வாள்வெட்டு சம்பவத்தில் ஒரு வயது குழந்தை உட்பட இருவர் படுகாயமடைந்துடன் வாள்வெட்டு தாக்குதலை மேற்கொண்டவரும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (27) அன்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஆரையம்பதி தீர்த்தகரை வீதியிலுள்ள வீடு ஒன்றில் வாழ்ந்துவரும் பெண் ஒருவருக்கும் அவரது உறவினருக்கும் இடையே பண கொடுக்கல் வாங்களையிட்டு சம்பவதினமான நேற்று இரவு 9.00 மணியளவில் பெண்ணின் வீட்டுக்கு சென்ற உறவினர் பணத்தை கேட்டு ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தையடுத்து பெண்ணின் உறவினரான ஆண் பெண்மீது வாளால் வெட்டீ தாக்குதலை மேற்கொண்டதையடுத்து பெண்ணும் அவரது ஒரு வயது குழந்தையும் வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளனர்.

இதனையடுத்து படுகாயமடைந்த குழந்தையையும் அவரது தாயாரையும் மட்டு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அதேவேளை குறித்த பெண்மீதும் அவரது குழந்தை மீதும் தாக்குதலை நடாத்தியவர் காயமடைந்து நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிசாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தாய்லாந்து – கம்போடியா நிபந்தனையற்ற போர் நிறுத்தத்துக்கு ஒப்புதல்

## மலேசிய பிரதமர் தகவல்

தாய்லாந்து மற்றும் கம்போடியா நாடுகள் நிபந்தனையற்ற உடனடி போர்நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டதாக மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிம் தெரிவித்துள்ளார்

தாய்லாந்தின் தற்காலிகப் பிரதமர் பும்தம் வெச்சயாசாய் மற்றும் கம்போடியாவின் பிரதமர் ஹன் மானெட் ஆகியோர் மலேசியாவின் புத்ரஜெயாவில் உள்ள பிரதமர் அன்வரின் அதிகாரப்பூர்வ இல்லத்தில் போர்நிறுத்தப் பேச்சுவார்த்தையில் திங்கட்கிழமை (28) ஈடுபட்டனர்.

கம்போடியா மற்றும் தாய்லாந்து தலைவர்களுடன் இணைந்து பேசிய மலேசிய பிரதமர் அன்வர், “கம்போடியா மற்றும் தாய்லாந்து இடையே மிகவும் நேர்மறையான முன்னேற்றத்தை காணும் வகையில் நல்ல முடிவுகளை நாங்கள் கண்டிருக்கிறோம்.” என்று அறிவித்தார்.

அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளின் தலைவர்களுடனும் இணைந்து மோதலுக்கு அமைதியான தீர்வைக் காண மலேசியா நெருங்கிய தொடர்பில் உள்ளது என அன்வர் கூறினார். ஜூலை 28 நள்ளிரவு அமலுக்கு வரும் வகையில் கம்போடியாவும் தாய்லாந்தும் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டுள்ளதாகவும் அன்வர் தெரிவித்தார். இது இரு நாடுகளுக்கு இடையேயான பதற்றத்தைத் தணிப்பதற்கும், அமைதி மற்றும் பாதுகாப்பை மீட்டெடுப்பதற்குமான நடவடிக்கையில் முதல் படியாகும் என்றும் அன்வர் கூறினார்.

கடந்த வியாழக்கிழமை (ஜூலை 24) எல்லையில் ஏற்பட்ட கண்ணிவெடி தாக்குதலில் 5 தாய்லாந்து வீரர்கள் காயமடைந்ததைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கு இடையே மோதல்



வெடித்தது. மோதல்களைத் தொடங்கியதற்காக இரு தரப்பினரும் ஒருவரையொருவர் குற்றம் சாட்டி வருகின்றனர். 5ஆவது நாளாக நீடிக்கும் இந்த போரில் இருதரப்பிலும் இதுவரை 35 பேர் உயிரிழந்தனர். இரு தரப்பிலும் 2,60,000-க்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்த்துள்ளனர். இரு நாடுகளும் தங்கள் தூதர்களை திரும்ப பெற்றதுடன், இரு நாடுகளுக்கு இடையிலான அனைத்து எல்லைகளும் மூடப்பட்டுள்ளன.

# ஜப்பான் தூதுவரை சந்தித்த இ.தொ.கா.

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் அகியோ ஐசோமாட்டா (Akio ISOMATA) அவர்கள் நுவரெலியாவிற்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இவ்விஜயத்தின் போது, இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் செந்தில் தொண்டமான், தவிசாளர் மருதபாண்டி ராமேஸ்வரன், பிரதி தவிசாளர் ராஜதுரை, நுவரெலியா மாநகரசபையின் பிரதி மேயர் யோகராஜா, முன்னாள் அமைச்சர் புத்திர சிகாமணி ஆகியோரை உத்தியோகபூர்வமாக சந்தித்து கலந்துரையாடல் மேற்கொண்டார்.

இச்சந்திப்பின் போது, மலையக மக்களுக்கு தேவையான அபிவிருத்தி, எதிர்கால பொருளாதார வளர்ச்சி திட்டங்கள் என்பவற்றிற்கு ஜப்பான் உதவி வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது. இக்கோரிக்கையை ஏற்று சாதகமாக பரிசீலிப்பதாக ஜப்பான் தூதுவர் உறுதியளித்தார்.

## கப்பலின் பிளாஸ்டிக்

# துவல்கள் கரையில் ஒதுங்குகின்றன





■ எஸ்.ஆர்.லெம்பெட்

சேரள கடற்பரப்பில் பிளாஸ்டிக் துவல்களை ஏற்றிச் சென்ற கப்பல் கடந்த மே மாதம் 25ஆம் திகதி மூழ்கிய நிலையில், குறித்த கப்பலில் காணப்பட்ட பிளாஸ்டிக் துவல்கள் தற்போது மன்னார் மாவட்டத்தின் கடற்கரையோரங்களில் கரை ஒதுங்கி வருகிறது.

இந்த நிலையில், கரை ஒதுங்கித் தேங்கிக் கிடக்கும் பிளாஸ்டிக் துவல்களை அகற்றும் செயல்பாடு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை(28) அன்று மன்னார் சௌத்பார், கீரி, தாழ்வுபாடு கடற்கரை பகுதிகளில் பிளாஸ்டிக் துவல்களை அகற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதற்காக குறித்த பகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மக்களுக்கு நாளாந்த கொடுப்பனவொன்றை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

கடல் சூழலையும்,கடல்வாழ் உயிரினங்களையும் பாதுகாக்கும் வகையில் குறித்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.கடல்சார் பாதுகாப்பு சூழல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் குறித்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆரம்ப நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் ஜெகதீஸ்வரன்,மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், மன்னார் பிரதேசச் செயலாளர் எம்.பிரதீப்,கடல்சார் பாதுகாப்பு சூழல் திணைக்கள பிரதி நிதிகள்,பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டுள்ளனர்.

## ஊவா மாகாண பிரதம செயலாளர் நியமனம்

ஊவா மாகாணத்தின் பிரதம செயலாளராக பீ.ஏ.ஜீ.பெர்னாண்டோவை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க நியமித்துள்ளார்.

இது தொடர்பான நியமனக் கடிதத்தை ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க திங்கட்கிழமை (28) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து அவரிடம் கையளித்தார்.

இலங்கை நிர்வாக சேவையின் சிறப்பு தர அதிகாரியான பீ.ஏ.ஜீ.பெர்னாண்டோ, இதற்கு முன்னர் மேல் மாகாணக் கல்வி, கலாசார மற்றும் கலை நடவடிக்கைகள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அமைச்சின் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார்.



## அலுமாரியில் ஆயுதங்கள்: பெண் கைது

பண்டாரவளையில் அமைந்துள்ள வீட்டில் ஒன்றின் அலுமாரியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரிவால்வர், ஒரு கைத்துப்பாக்கி, வெடிமருந்துகள் மற்றும் இரண்டு கத்திகளை வைத்திருந்ததாக சந்தேகத்தின் பேரில் ஒரு பெண் ஞாயிற்றுக்கிழமை (27) கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரவளை, கஹத்தேவலவைச் சேர்ந்த 43 வயதுடைய பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த ரகசிய தகவலின் பேரில் வீட்டை சோதனை செய்தபோது, வீட்டில் உள்ள அலுமாரியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு பொதியில் இந்தப் பொருட்கள் இருந்ததாகக் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒரு ரிவால்வர், 28 வெடிமருந்துகள் மற்றும் ரிவால்வருக்குப் பயன்படுத்தப்படும் 5 வெற்று குண்டுகள், 20 மிமீ பிஸ்டல், ஒரு மகசின் மற்றும் 2 உயிருள்ள வெடிமருந்துகள், ஒரு பிஸ்டல் கேஸ் மற்றும் 2 கத்திகள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டன.

இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் வீட்டில் இருந்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார் விசாரித்தபோது, தனது கணவர் வெளிநாட்டில் இருப்பதாக அவர் கூறியதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வேன் டயர் வெடித்ததில்

# இருவர் உயிரிழப்பு

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் அங்குனுகொலபெலஸ்ஸ 175 கி.மீ கட்டை அருகில் ஞாயிற்றுக்கிழமை (27) மாலை 5.30 மணியளவில் பயணித்த வேன் டயர் வெடித்து விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வெலிகம , தெனிபிட்டிய மற்றும் வரகாபிட்டிய பகுதிகளைச் சேர்ந்த 40 , 60 வயதுடைய நிலுகா மற்றும் ஞானவதி என்ற இரண்டு பெண்கள் விபத்தில் உயிரிழந்தனர்.

மேலும் விபத்தில் காயமடைந்த நால்வர் அங்குணகொலபெலஸ்ஸ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக ஹம்பாந்தோட்டை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.




விபத்து தொடர்பாக அங்குணகொலபெலஸ்ஸ அதிவேக நெடுஞ்சாலை சோதனைச் சாவடியில் உள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

## இறந்த நிலையில் காட்டு யானை மீட்பு

■ எப்.முபாரக்



திருகோணமலை சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிறிமங்களபுர பகுதியில், வயல்வெளியை ஒட்டிய காட்டுப் பகுதியிலிருந்து சுமார் 30 வயது மதிக்கத்தக்கக் காட்டு யானை ஒன்று திங்கட்கிழமை (28) அன்று இறந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

வன ஜீவராசிகள் திணைக்களத்தின் சேருநுவர காரியாலய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த யானையின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. உயிரிழந்த யானை சுமார் இரண்டு நாட்கள் ஆகியிருக்கலாம் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மரணத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில் இதனை உறுதி செய்வதற்காக, யானையின் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களத்தினர் மேலும் தெரிவித்தனர்.

பரிசோதனையின் முடிவுகளுக்குப் பின்னரே மரணத்திற்கான உண்மையான காரணம் தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சம்பவம் குறித்து சேருநுவர பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அப்பகுதியில் உள்ள மக்களிடமும் வன அதிகாரிகளிடமும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.


## குஷ்உடன் இருவர் கைது

■ டி.கே.ஜீ.கபில

சுமார் 10 கோடி ரூபாய் பெறுமதியுடைய ‘குஷ்’ என்ற போதைப்பொருளுடன் நாட்டிற்கு வந்த வெளிநாட்டவர்கள் இருவர், அனைத்து சோதனைகளையும் முடித்துவிட்டு விமான நிலையத்திலிருந்து வெளியேறிக்கொண்டிருந்த நிலையில் விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவைச் சேர்ந்த 36 வயதுடைய ஆண் மற்றும் 56 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் உள்ள ஒரு பெண்ணின் உத்தரவுக்கமைய இந்த போதைப்பொருளை இருவரும் நாட்டிற்கு கொண்டு வந்ததாக சந்தேக நபர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.



இருவரும் தாய்லாந்தின் பேங்கொக்கில் இந்த போதைப்பொருளை வாங்கி, மலேசியா சென்று அங்கிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்துள்ளனர். அவர்களிடமிருந்து குஷ் போதைப்பொருள் 10 கிலோ கிராம் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

## நல்லூர் கொடிச்சீலை

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை(29) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள நிலையில், கொடியேற்றத்திற்காக சம்பிரதாயப் பூர்வமாகக் கொடிச்சீலை எடுத்து வரும் நிகழ்வு திங்கட்கிழமை (28) அன்று நடைபெற்றது.

செங்குந்தர் பரம்பரையினரால் நல்லூர் ஆலயக் கொடியேற்றத்திற்கான கொடிச்சீலை சம்பிரதாயப் பூர்வமாக ஆலயத்தில் ஒப்படைக்கப்படுவது பாரம்பரிய வழக்கமாகும்.

அதன்படி, யாழ். சட்டநாதர் சிவன் ஆலயத்திற்கு அருகில் உள்ள வேல் மடம் முருகன் ஆலயத்தில் திங்கட்கிழமை(28) அன்று நடைபெற்ற விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து அங்கிருந்து சிறிய தேர் ஒன்றில் கொடிச்சீலை பருத்தித்துறை வீதி ஊடக எடுத்துச் செல்லப்பட்டு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தினை வந்தடைந்து. கொடிச்சீலை நல்லூர் ஆலய பிரதம குருக்களிடம் கையளிக்கப்பட்டது.

நல்லூர் ஆலய மகோற்சவ கொடியேற்றம் இன்று செவ்வாய்க்கிழமை (29) காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதுடன், தொடர்ந்து 25 நாட்களுக்கு மஹோற்சவ திருவிழாக்கள் இடம்பெறும்.

மகோற்சவ திருவிழாக்களின் 10ஆம் திருவிழாவான மஞ்ச திருவிழா எதிர்வரும் 07ஆம் திகதியும், 22ஆம் திருவிழாவான மாம்பழ திருவிழா எதிர்வரும் ஆகஸ்ட் 19ஆம் திகதியும், 24ஆம் திருவிழாவான தேர் திருவிழா ஆகஸ்ட் மாதம் 21ஆம் திகதி காலையும், மறுநாள் 22ஆம் திகதி காலை தீர்த்த திருவிழா இடம்பெற்று, மாலை கொடியிறக்கம் இடம்பெற்று, மஹோற்சவ திருவிழாக்கள் நிறைவுபெறும்

- நிதர்ஷன் வினோத்

















# யானைகளை கொல்லும் ஒழுங்கமைக்கப்பட்ட குழுவை விசாரிக்கவும்

நம் நாட்டில் யானை வளம் இழக்கப்படும் சதவீதத்தையும், அது ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் இழக்கப்படும் சதவீதத்தையும் கருத்தில் கொண்டு, எதிர்கால சந்ததியினருக்காக யானைகளைப் பாதுகாக்கவேண்டிய அவசியமாகும்.

இலங்கையில் யானை இறப்புகள் குறித்த புள்ளிவிவர தரவு எதிர்கால பேரழிவின் அறிகுறிகளைக் காட்டுகிறது. இந்த யானை இறப்புகளுக்குப் பின்னால் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட சதி இருப்பதாக சுற்றுச்சூழல் அமைச்சர் வைத்திய கலாநிதி தம்மிக்க பட்டபெந்தி சுட்டிக்காட்டினார்.

வனவிலங்குத் துறையின் புள்ளிவிவரத் தரவுகளின்படி, 2024இல் சுமார் 388 யானைகள் இறந்துள்ளன. அவற்றில் 17 கொம்பன் யானைகள் இருந்ததாகக் கூறப்படுகிறது.

எந்தச் சூழ்நிலையிலும், சுற்றுச்சூழல் அமைச்சரால் வெளிப்படுத்தப்பட்ட இந்த விஷயத்தில் சமூக மற்றும் அரசியல் நிலைமை மிகவும் தீவிரமானது. இந்த யானைகள் இறப்புகள் சதித்திட்ட கும்பலால் நடத்தப்படுகிறதா? என்பதை விசாரிப்பது பாதுகாப்புப் படையினரின் பொறுப்பாகும். இது தொடர்பாக இலங்கை பொலிஸ் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறையிடம் முறையான முறைப்பாடு அளிக்கப்பட்டது.

தந்தங்களைக் கடத்துவதற்காக யானைகள் கொல்லப்படுவதாக இங்குள்ள ஒரு தகவல் தெரிவிக்கிறது. பயிர் சேதத்தால் ஏற்படும் கோபத்தால் காட்டு யானைகளைக் கொல்ல மற்றவர்கள் தூண்டப்படுகிறார்கள் என்று கூறப்படுகிறது.

மற்றொரு குழு, நோய்வாய்ப்பட்ட அல்லது காயமடைந்த யானைகளின் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை சமூக ஊடகங்களில் பதிவேற்றுவதன் மூலம் பணம் சம்பாதிக்கும் மோசடியில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வனவிலங்குத் துறையால் நடத்தப்பட்ட ஆய்வுகள், ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்கள் துப்பாக்கிச் சூடு, பொறி வைத்தல், மின்சாரம் பாய்ச்சுதல், விஷம் வைத்தல் மற்றும் யானைகளுக்கு பல்வேறு விபத்துக்களை ஏற்படுத்துதல் ஆகியவற்றை வெளிப்படுத்தியுள்ளன.

பாரம்பரிய ஏழை விவசாயிகளின் வாழ்வாதாரத்தை காட்டு யானைகள் அழிக்கின்றன என்பது உண்மைதான். காட்டு யானைகளால் மனித உயிர்கள் அழிக்கப்படுகின்றன என்பதும் உண்மைதான். ஆனால், இதுபோன்ற சூழ்நிலைகளில், காட்டு யானைகளை முறையாகக் கொல்வதை அனுமதிக்க முடியாது.

யானை இறப்பு பிரச்சினை மிகவும் உணர்திறன் வாய்ந்த சமூக மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினையாகும். முதலில் மனித தரப்பிற்கும், இரண்டாவதாக யானை தரப்பிற்கும் நீதி வழங்கப்படும் வகையில் தீர்வு முன்மொழியப்பட வேண்டும். இந்த நீதி இருதரப்பு முறையில் செய்யப்பட வேண்டும்.

கடந்த காலத்தில், யானைகளை மிதித்து மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாக வரலாற்று புத்தகங்கள் கூறுகின்றன. சமூக விரோத செயல்களைச் செய்தவர்களுக்கும் சட்டத்தின் முன் குற்றவாளிகளாக இருந்தவர்களுக்கும் யானைகளை மிதித்து மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மேலும், இந்த யானை இறப்புகளை உணர்ந்த மற்றொரு தரப்பினர் கடந்த காலத்தில் அப்பாவி யானைகளைக் கொல்பவர்களுக்கு எதிராக மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என்று கூறியிருந்தனர். இல்லையெனில், பழைய மன்னர்களின் தண்டனைகள் யானைகளை மிதித்து நிறைவேற்றப்பட வேண்டும். ஆனால் இந்த பிரச்சனையை தீர்க்க இதுபோன்ற வழிமுறைகளை நாங்கள் முன்மொழிவதில்லை. எந்தவொரு தரப்பினரும் பல்வேறு நோக்கங்களுக்காக யானைகளைக் கொல்கிறார்கள் என்றால், அதை விசாரித்து உடனடி சட்ட நடவடிக்கை எடுப்பது அவசியம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# முஸ்லிம் எம்.பிக்கள் என்ன செய்கின்றார்கள்?

மொஹமட் பாதுஷா

பதவி என்பது சம்பந்தப்பட்ட நபர் வெறுமனே அதிகாரங்களைச் சுகிப்பதற்கான ஒரு ஏற்பாடல்ல, அது பல பொறுப்புக்களையும் பொறுப்புக்கூறலையும் கொண்டதாகும். தான் சார்ந்த மக்களுக்கு அப்பதவியின் ஊடாக சேவையாற்றாமல் வருடக் கணக்காக சும்மாவே குந்தியிருந்து, கதிரையைச் சூடாக்கி விட்டு செல்வதற்காக இது வழங்கப்படுவதில்லை.

ஒரு அரசியல்வாதிக்குப் பிரதிநிதித்துவ அரசியலில் வழங்கப்படுகின்ற பதவிகள் இவற்றுள் முக்கியமானவை. அந்த வகையில், தற்போதைய பாராளுமன்றத்தில் முஸ்லிம் சமூகத்தின் சார்பில் எம்.பிக்களாக அங்கம் வகிப்போர் இந்தப் பொறுப்பை உணர்ந்துள்ளார்களா? அதனை எவ்விதம் நிறைவேற்றப் போகின்றார்கள் என்ற கேள்வி எழுகின்றது.

முன்னைய காலங்களில் சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி போன்ற பெருந்தேசியக் கட்சிகளின் ஊடாக முஸ்லிம் அரசியல்வாதிகள் பதவிகளைப் பெற்றுக் கொண்டனர். எம்.பிக்களாக அமைச்சர்களாக இருந்தனர். அவர்கள் தனியே முஸ்லிம் சமூகம் என்ற அடிப்படையில் பிரத்தியேகமாகப் பேசவில்லை.

ஆயினும், கூட, தாங்கள் அரசாங்கத்துடன் இருந்தாலும் எதிர்த்தரப்பில் இருந்தாலும் சமூகத்திற்கான விடயங்கள் பலவற்றைத் திட்டமிட்டுச் செய்திருக்கின்றார்கள். முஸ்லிம் சமூகம் தொடர்பான விவகாரம் ஒன்று வருகின்றபோது, அதற்காக ஜனநாயக வழியில் குரல்கொடுத்த பலரையும் கண்டிருக்கின்றோம்.

இந்த அடிப்படையில்தான், துருக்கித் தொப்பி போராட்டம் போன்ற முன்னெடுப்புக்களை நாம் இன்று வரை நினைவுகூர்ந்து கொண்டிருக்கின்றோம்.

1980களில் நிலைமைகள் மாறின. அதன் பிறகு வடக்கு, கிழக்கில் தமிழ் அரசியல் வேறு வடிவம் எடுத்தது. தமிழ் ஆயுதக் குழுக்களும் இதற்கிணையாக 'தமது பாணியில்' செயற்படத் தொடங்கின. ஒரு குறிப்பிட்ட காலப் புள்ளியில் இருந்து இரண்டும் திரைமறைவில் சேர்ந்தியங்கின எனலாம்.

இந்தக் கட்டத்தில்தான் கிழக்கிலிருந்து முஸ்லிம்களுக்கான தனித்துவ அடையாள அரசியல் உருப்பெற்றது. இதனைப் பொறுக்கமாட்டாத பெருந்தேசியமும் தமிழ்த் தேசியமும் குறிப்பாக விடுதலைப் புலிகள் போன்ற ஆயுத இயக்கங்களும் முஸ்லிம் காங்கிரஸின் பேரெழுச்சியை நசுக் முற்பட்டன. ஆனால், மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் என்ற மக்கள் தலைவன் மற்றும் அவரோடு அன்றிருந்த அரசியல்வாதிகளின் ஆளுமையும், நெஞ்சுரமும் பலமான அடித்தளமொன்றை இட்டது என்பதை மறுக்க முடியாது.

அதற்கு முந்திய காலத்தில் எந்தவொரு அரசியல் தலைவரும் செய்திராத தூர நோக்கான திட்டங்களை அஷ்ரப் குறுகிய காலத்திற்குள் முன்னெடுத்தார். பல இளம் அரசியல்வாதிகளை உருவாக்கினார்.

பெருந்தேசியத்துடன் மிகப் பலமான உறவை வைத்துக் கொண்டு சமூகத்திற்காக அதே பெருந்தேசியத்தையும், விடுதலைப் புலிகளையும் எதிர்ப்பதற்கான தைரியம் அவருக்கு இருந்தது. நோர்வேயின் உள் வருகையை அவர் நேரிடையாகவே சந்திரிகா அம்மையாரிடம் எதிர்த்தார். அவரது மரணம், இப்படியான காரணங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட சதித்திட்ட படுகொலையாகவும் இருக்கலாம் என்பது வேறு விடயம்.

2000ஆம் ஆண்டிற்குப் பிறகு முஸ்லிம் அரசியலில் எதிர்பாராத மாற்றங்கள் உருவாகின. றவூப் ஹக்கீம் தலைவரானமை, அக் கட்சியிலிருந்து பிரிந்து சென்றவர்கள் புதிய கட்சிகளைத் தொடங்கியமை என்று பல சம்பவங்கள் நடந்தேறி விட்டன.

அதன் பிறகு, ஹக்கீம், றிசாட், அதாவுல்லா உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்களும் பல பிராந்திய அரசியல் தலைவர்களும் எம்.பிக்களும் பதவிக்கு, அதிகாரத்திற்கு வந்தார்கள். இன்னும் சிலர் இப்போதும் இருக்கின்றார்கள்.

இவர்கள் யாருமே முஸ்லிம் சமூகத்திற்கு எதுவுமே செய்யவில்லை என்று கூறி விட முடியாது. இவர்களுள் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் இரண்டு மூன்று அரசியல்வாதிகள் அபிவிருத்தி அரசியலில் குறிப்பிடத்தக்க பணிகளை ஆற்றியுள்ளனர்.

ஆனால், மறைந்த தலைவரின் அளவுக்கு இவர்கள் மக்களுக்கு சேவையாற்றவில்லை. தூர நோக்கான திட்டங்களை முன்னெடுக்கவில்லை. மக்கள் மனங்களை வெல்லவில்லை என்ற மனக்குறை இன்றும் இருக்கின்றது. மு.கா. தலைவர் ஹக்கீம் உட்பட பலர் மீது இவ்வாறான விமர்சனங்கள் உள்ளன.

2000ஆம் ஆண்டு தொடக்கம் இப்போதைய நாடாளுமன்றம் வரையான காலப் பகுதியில் எம்.பி.யாக இருந்தவர்கள், இருப்பவர்கள் முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளுக்காக, அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காக பலமாக குரல் எழுப்பவில்லை என்பதுதான் மக்களின் குற்றச்சாட்டாகும்.

பெரும்பான்மையின அரசியல் தலைவர்களுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருந்த காலத்திலும், கையில் அதிகாரமும் பதவியும் இருந்த வேளையிலும் கூட முஸ்லிம் அரசியல்வாதிகள் மக்களுக்குச் செய்ய வேண்டிய முக்கிய பணிகளை செய்யவில்லை என்பது மிகப் பெரிய கைசேதமாகும்.

இதே வழியில், 2024 பாராளுமன்றத் தேர்தலின் பின்னரான தற்போதைய நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற முஸ்லிம் எம்.பிக்களும் கதிரைச் சூடாக்கி விட்டு, காலத்தை கடத்தப் போகின்றார்களா என்ற சந்தேகம் இப்போது நியாயமாக எழுந்துள்ளது,

முஸ்லிம் கட்சிகளின் ஊடாகவும் எஸ்.ஜே.பி. போன்ற பெரும்பான்மைக் கட்சிகளின் ஊடாகவும் இந்த முறை தெரிவு செய்யப்பட்டுள்ள முஸ்லிம் எம்.பிக்கள் தங்களது பொறுப்பை எவ்விதம் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

அதேபோல், மிக முக்கியமாக ஆளும் தேசிய மக்கள் சக்தியூடாக பாராளுமன்றத்திற்கு வந்துள்ள புதுமுக முஸ்லிம் எம்.பிக்கள் தாம் சார்ந்த சமூகத்திற்காக என்ன செய்யப் போகின்றார்கள்? அதற்கான திட்டத்தையும் தைரியத்தையும் அவர்கள் கொண்டுள்ளார்களா?

பாராளுமன்றத்தில் மொத்தம் 22 முஸ்லிம் எம்.பிக்கள் உள்ளனர். ஆளும் கட்சி சார்பான 8 முஸ்லிம் எம்.பிக்களில் ஒருவர் பிரதியமைச்சர், இன்னுமொருவர் பிரதி சபாநாயகர். ஏனைய கட்சிகளிலிருந்து 14 பேர் எம்.பிக்களாக உள்ளனர்.

இவர்களுள் முஜிபுர் ரஹ்மான், மரிக்கார், றவூப் ஹக்கீம், நிசாட் பதியுதீன், உதுமாலெப்பை, நிசாம் காரியப்பர், போன்ற விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலர் மட்டுமே நாடாளுமன்றத்தில் இடைக்கிடையாவது நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதைக் காண முடிகின்றது.

இவர்களில் சிலரும் முஸ்லிம் சமூகத்துடன் தொடர்புபட்ட பிரத்தியேக விவகாரங்கள் தொடர்பில் உரையாற்றுவதை மட்டுப்படுத்திக் கொண்டுள்ளனர். பாராளுமன்றத்திற்கு வெளியிலான செயற்பாட்டு அரசியலிலும் நிலைமை இவ்வாறுதான் உள்ளது.

இதேவேளை, ஆளும் கட்சி ஊடாக எம்.பியாக பதவி வகிக்கும் முஸ்லிம் எம்.பிக்களின் நிலைமை இதைவிட மோசமாகும். அவர்கள் அரசியலுக்குப் புதியவர்கள். அதிர்ஷ்டவசமாக எம்.பியான பலருள் இவர்களும் உள்ளடங்குவர்.

என்.பி.பி. என்பது என்னதான் சமூக நல்லிணக்கம், இன மத பேதங்களைக் கடந்த அரசியல் என்று பிரசாரம் செய்து தேர்தலில் வெற்றி பெற்றாலும், முஸ்லிம் ஒருவரை அமைச்சராக நியமிக்காதது முதற் கோணலாகும். அத்துடன், என்.பி.பியை கட்டுப்படுத்த முனையும் ஜே.வி.பி.க்கும் என்.பி.பி. அணிக்கும் இடையில் பல முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

பொதுவாக ஜே.வி.பியில் ஒருவித கட்டுக்கோப்பு உள்ளது. எந்த விடயத்தைச் செய்வது என்றாலும், தனது விருப்பப்படி ஒரு எம்.பி. செய்து விட முடியாது. அது பற்றிய மேலிடத்து ஒப்புதல் வேண்டும் என்று விடயமறிந்தவர்கள் கூறுவதுண்டு.

அத்துடன் என்.பி.பியின் முஸ்லிம் எம்.பிக்களும் அரசியலுக்கு புதியவர்கள். இலங்கையர் என்ற பொதுமைப்படுத்தலுக்குள் மூழ்கடிக்கப்பட்டுள்ள இவர்கள் தனியே முஸ்லிம் சமூகத்திற்காகக் குரல் கொடுப்பதாகவோ, காணிப் பிரச்சினைகள், பதவிகளிலான இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை மற்றும் உரிமை மீறல்கள் பற்றி நாடாளுமன்றத்திலோ அதற்கு வெளியிலேர் பேசுவதையோ செயற்படுவதையோ காணக் கிடைக்கவில்லை.

ஆளும் தரப்பின் முஸ்லிம் செயற்பாட்டாளர்கள் பலர் அதிருப்தியடைந்துள்ளதாகக் கூறப்படுவது ஒரு புறமிருக்க, 'ஆளும் கட்சி எம்.பிக்கள் ஓரிருவர் எதிரணி முஸ்லிம் எம்.பிக்களிடம் சில விடயங்களைப் பேசுமாறு வலியுறுத்துவதாக' ஒரு முஸ்லிம் எம்.பி. தனக்கு நெருக்கமான ஒருவரிடம் கூறியுள்ளார்.

ஒரு வரப்பிரசாதமாக எம்.பி. பதவியை தந்த என்.பி.பி.-ஜே.வி.பி. அரங்கத்தின் ஆட்சியில், வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட என்.பி.பி. முஸ்லிம் எம்.பிக்களோ அல்லது தேசியப்பட்டியல் எம்.பியான ஆதம்பாவாவோ மக்களுக்காகக் குரல் கொடுக்க வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். ஆனால் அது நடைமுறைச் சாத்தியமானதாகத் தெரியவில்லை.

ஆளும் தரப்பில் இருந்தாலும், எதிரணியில் இருந்தாலும் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தனது சமூகத்தின் பிரச்சினைகள், அபிலாஷைகளுக்காகக் குரல் கொடுக்காமல், வெறுமனே தன்னுடைய பெயர் 'முஸ்லிமாக' இருப்பதால் மட்டும் அவர் 'முஸ்லிம்களின் எம்.பியாக' ஆகிவிடுவதில்லை என்பதை மட்டும் புரிந்து கொண்டால் சரி.



## வாழ்வியல் தரிசனம்

பிரதி உபகாரங்களை எதிர்பாராதவர்கள், ஈ ஆசைகள் அற்றவர்கள்; பிறருக்கு உதவுவதில் பரந்த மனம் உள்ளவர்களாக இருப்பார்கள். தாங்கள் கொடுத்ததை விளம்பரம் செய்யாதவர்கள். உண்மையான கொடையாளிகள்.

ஏழைகளுக்கு வலிந்து உதவிகளைச் செய்தாலும் அதை ஏற்றவர்கள், பின்னர் அவர்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. சகல மக்களின் உழைப்பினால்த்தான் உலகம் வாழ்கின்றது. ஆனால், இன்னமும் ஏழை மக்களுக்கு உதவுபவர்கள் குறைந்தவர்களாகவே இருக்கிறார்கள். மனிதர் ஒருவரில் ஒருவர் சார்ந்து வாழ்வது இயற்கையானது.

தனித்து இயங்க முடியாது. எனவே, சகலரையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் உருவாக வேண்டும். எல்லோருக்கும் எல்லாமும் கிட்டாது; இல்லாதவன் பெறுமதி அற்றவன் இல்லை.

வாழ்க்கைச் சுழற்சி சாதாரணமானது. எதனை எவரும் முழுமையாக உணர்கின்றார்களா? அறிந்தும் அறியாதவர்கள் போல, வாழ்கின்றவர்களே அநேகமானவர்களாக இருக்கின்றார்கள். யதார்த்த உண்மையை உணர்க.

–பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### "வீதியை செப்பனிட்டு தரவும்"

மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட மஸ்கெலியா நகரில் உள்ள மத தளங்களுக்கு மற்றும் பாடசாலைகளுக்கு செல்லும் நுழைவாயில் வீதி பாரிய குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

அவ்வீதியில் ஸ்ரீ சண்முக நாதர் ஆலயம்,சுமணாராம பௌத்த விகாரை, மஸ்கெலியா முஸ்லிம் பள்ளிவாசல், சென் ஜோசப் கிறிஸ்தவ தேவாலயம்,சமன்னெலிய சிங்கள பாடசாலை அமைந்துள்ளது. அத்துடன், சுமார் முன்னூறுக்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன.

ஆலயங்களுக்கு செல்லும் பக்தர்கள், பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் பாரிய அளவில் இன்னலுக்கு முகம் கொடுக்க வேண்டி உள்ளது.

இது குறித்து மஸ்கெலியா பிரதேச சபை உடன் நடவடிக்கை எடுத்துக் குறித்த வீதியைச் செப்பனிட்டுத் தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

– செ.தி.பெருமாள்



## பாடசாலை மாணவர்களுக்கான

# ஆளுமை விருத்தி மேம்பாட்டு உத்திகள்



ந.கோபிராம்,
உளவியல்துறை மாணவன்,
யாழ். பல்கலைக்கழகம்.

ஆளுமை என்பதை ஒருவரிடம் காணப்படும் உடற் கவர்ச்சியின் அளவு என்று பலர் எண்ணுகின்றனர். அத்துடன் பிறரைக் காட்டிலும் குறிப்பிட்ட ஒரு பண்பிலோ, திறனிலோ மிகச் சிறந்து விளங்குவதனை சிறந்த ஆளுமை உடையவன் அல்லது உடையவள் என்கின்றனர். ஆனால், ஆளுமை தனியே இவ்வாறு அமைவதில்லை. அது பரந்துபட்ட விளக்கத்தைத் தரக்கூடியது. பொதுவாக ஆளுமை என்பது ஒருவர் பெற்ற உடல், உள, சமூக பண்புகள், மனப்பான்மைகள், மனநிலைகள் எல்லாம் இணைந்தது ஆகும், இது ஒவ்வொரு தனிமனிதனிடமும் காணப்படுவதுடன் மக்களின் உறவுகள், சமுதாய குழுக்கள், சுற்றுச்சூழல் ஆகியவற்றுடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது.

மாணவர்கள் அறிவு, திறன், மனப்பாங்கு, விழுமியம் போன்றவற்றின் ஊடாக தம்மைத் தேர்ச்சி அடையச் செய்வதே கல்வியின் பிரதான நோக்காகும். இவர்களை சமூகத்தில் நல்ல ஆளுமை மிக்க நபராக உருவாக்குவதில் பாடசாலையின் பங்கு அளப்பரியது. மாணவர்கள் எனும் போது, அவர்கள் 5 முதல் 18 வயது வரை கல்வி கற்பவர்களாகக் காணப்படுகின்றனர். இன்றைய காலகட்டத்தில் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி நன்மைகளை ஏற்படுத்தினாலும் கூட சவால்களையும், போட்டி மிக்க நெருக்கடி சூழலையும் உருவாக்கி உள்ளது. இவ்வாறான நிலையில், ஒவ்வொரு மனிதனும் ஆளுமையை வளப்படுத்துவது அவசியம். பிரதானமாக மாணவர்கள் ஆளுமையை உரிய முறையில் விருத்தி செய்து மேம்படுத்திக் கொள்வதன் ஊடாக பல சவால்களையும் எதிர்கொண்டு சாதிக்க வழிவகை செய்கின்றது.

அந்த வகையில், மாணவர்களின் ஆளுமை (பண்புத்திறன்) விருத்தியை மேம்படுத்த உதவும் உத்திகளை நாம் பார்ப்போம்.

### சுய முன்னேற்றப் பயிற்சிகள்

மாணவர்களை சுயமாக கற்றலை (Self-directed learning) மேற்கொள்ள ஊக்குவித்தல் பிரதானமாகின்றது. பாடசாலைகளில் வகுப்பறை கல்வி நடவடிக்கையின்போது, அது தவிர்ந்த பிற சூழல்களிலும் (வீடு, தனியார் கல்வி நிலையங்கள்) இந்த சுயகற்றல் மாணவர்களின் ஆளுமை விருத்திக்கு வழிவகுக்கின்றது. அத்துடன் தோல்விகள், தவறுகள் விடும் சந்தர்ப்பங்களில் அதிலிருந்து கற்றுக்கொள்ளும் மனப்பாங்குகளை வளர்த்து கொள்ளும்போது, மாணவர்கள் தம் சுய நம்பிக்கை, சுயவிழிப்புணர்வு என்பன விருத்தி அடைந்து அவர்களின் ஆளுமையும் விருத்தியடைகின்றது.

### இணை பாடவிதான செயற்பாடுகள்

தனியே பாடத்துறை சார்ந்த கற்றலை மேற்கொள்வதினால் மட்டும் ஆளுமையை விருத்தி செய்ய முடியாது. இணைபாடத்தின் ஊடாக சமூக நடத்தை, பழக்கவழக்கங்கள் தெரிந்து கொள்வதுடன் சமூகத்திற்கு ஏற்ற வகையில் வழிப்படுத்த உதவுகின்றது. பாடசாலையில் இடம்பெறும் கலை நிகழ்ச்சி, விளையாட்டுப்போட்டி, சாரணர் இயக்கம் முதலானவற்றில் ஆர்வத்துடன் பங்கு பெறுதல் மற்றும் செயற்திட்டங்கள் (கண்காட்சி, சிரமதானம், சுற்றுலா) பங்குபற்றுவதன் ஊடாக புதிய அனுபவங்கள், உற்சாகம், பொருந்தி வாழும் தன்மை, சேர்ந்து இயங்கும் தன்மை, விட்டுக் கொடுக்கும் தன்மை, தலைமைத்துவ பண்பு என்பன ஏற்படுகின்றது. பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் (இலக்கிய போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள், வினாடி வினாப் போட்டிகள், கலைப் போட்டிகள், பட்டிமன்றங்கள்) முதலானவற்றில் ஈடுபடுவதன் ஊடாக ஆளுமை விருத்தி மேம்பாடு அடைகின்றது.

### நல்ல உறவுகளை உருவாக்குதல்

மாணவர்களுக்கு நல்ல நட்புகளை உருவாக்கி, அவற்றைக் கையாள கற்றுக்கொடுக்க வேண்டும். நல்ல நட்பானது சீரான வழிகாட்டலுக்கும், வெற்றிக்கும் உறுதுணையாகி அமைவது மட்டுமல்லாது பிரச்சனைகள் அல்லது தடைகள் நோக்கிச் செல்லாது நேர்வழியிலே செல்ல வழிகாட்டுகின்றது. மற்றும் உள்ளூர், சர்வதேச மாணவர்களுடன் பரஸ்பர கலந்துரையாடல்களை (Exchange Programs) ஊக்குவிப்பதன் ஊடாகவே மொழி பரிமாற்றம், தொடர்பாடல் விருத்தி, கலாச்சார விருத்தி ஏற்படுவதுடன் ஆளுமையும் விருத்தியடைகின்றது.

நெறிப்படுத்தல் நடவடிக்கை

நேரம் எமது வாழ்வில் மிக முக்கியமாகின்றது. நேர மேலாண்மை சரியாக பேணுவதன் ஊடாக பல விடயங்களை சரிவரச் செய்யவும், பல இன்னல்களை தவிர்க்கவும் உதவுகின்றது. நேரமேலாண்மையானது அன்றாட செயல்பாடுகளுக்கு நன்றாகவே உதவுகின்றது. எமது வாழ்வின் இலக்கை நிர்ணயித்து நடைமுறைப்படுத்துவதிலும் இதன்பங்கு அளப்பரியது.

### தொழில்நுட்ப வளர்ச்சி

ஆரம்பத்தில் கூறியது போல, இன்றைய உலகில் தொழில்நுட்ப வளர்ச்சி தடுக்க முடியாதாகி விட்டது. இவ்வாறான போட்டி உலகில் எமக்கு இவை பற்றிய அறிவை மேம்படுத்தும் போது ஆளுமை நன்றாகவே விருத்தியடைந்து செப்பனிடப்படுகின்றது. Computer Skills, Online Tolls பயன்பாடு, தொழில்நுட்ப கற்றல் முறைகள் (E-learning Platforms) கையாள்வதால், AI [Aritificial intelligence] பற்றிய அறிவு என்பன முக்கியமாகின்றன.

சமூக தொடர்பு திறன் மேம்பாடு

மாணவர்களுக்கு மக்களுடன் நெருங்கி இடைவினை (தொடர்பு) கொள்ளும் நிலை தற்போது உலகில் குறைவாகவே காணப்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆளுமை பாதிப்படையும். அதனால் மக்களுடன் நெருங்கிப்பழகி (Inter Personal Skills) மற்றும் (Communication Skills) உரையாடல் திறன், நம்பகத்தன்மை (Assertiveness), முறைசார் உரையாடல் (Formal Commuication) ஏற்படுத்திக் கொள்வதின் ஊடாக ஆளுமை விருத்தி மேம்படுகின்றது.

### உளநல மேம்பாடு (மனநல மேம்பாடு)

தவறான உந்துதல்கள் மற்றும் தூண்டல்கள், தீய பழக்க வழக்கங்களைப் பின்பற்றுவதைத் தவிர்த்தல், சரியான மன வளர்ச்சியைக் கையாளுதல், அதாவது சூழ்நிலைக்கேற்ப உணர்வுகளைச் சரியான முறையில் வெளிப்படுத்தல். இதற்கு ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலை உளவளத்துணையாளரின் வழிகாட்டல் சிறந்தது. அத்துடன், பாரபட்சம், மூடநம்பிக்கைகளை தவிர்த்து அனைவரிடமும் அன்பு, நட்புடன் பழகுவதன் ஊடாக உளநலம் மேம்படுவதுடன், ஆளுமை விருத்தியும் அதிகரிக்கின்றது.

தன்னம்பிக்கையை வளர்த்தல்

பாடசாலைகளில் மாணவர்களின் திறன்களைப் பாராட்டுதல் மற்றும் ஊக்கப்படுத்தலின் மூலமாகத் தன்னம்பிக்கை வளர்கின்றது. மாணவர்கள் பங்கு பெறும் சிறு சிறு போட்டிகள், ஏன் நல்ல செயற்பாடுகள், பழக்கவழக்கங்கள், கருத்துக்களை முன்வைக்கும் சந்தர்ப்பங்களிலும் வாழ்த்துதல், கைதட்டுதல், புகழ்தல் என்பன மூலம் அவர்களின் தன்னம்பிக்கையை மேலும் அதிகரிக்க முடியும்.

### பரிந்துரைகள், வழிகாட்டல்

முதியோர்களிடமிருந்து மற்றும் ஆசிரியர்களிடமிருந்து அவர்களின் கருத்துக்கள் மற்றும் வழிகாட்டல்களை மதித்து நடப்பது நல்லது. அது மட்டுமல்லாது, வல்லுநர் பேச்சுகள் (Expert Talks) மற்றும் தொழில் முனைவோர்களின் சந்திப்புகள் முதலானவற்றில் பங்கு கொள்வதன் மூலம் ஆளுமை மேம்படுகின்றது.

ஆரோக்கியமான வாழ்க்கை முறை வழிகாட்டல்

உடல் நலம், உள நலத்தைப் பேணும் பழக்கவழக்கங்களினை (u;ealthy u;abits) கற்பது சிறந்தது. தினசரி உடற்பயிற்சி செய்தல் மற்றும் யோகாசனம், தியானம், இஷ்ட தெய்வ வழிபாடுகள், இனிய இசை கேட்டல் என்பன மனதை ஒருநிலைப்படுத்த உதவுகின்றது. மன அழுத்தத்தை (Stress) குறைக்கவும் இவை உதவுகின்றது.

### திறன் வளர்ச்சி நடவடிக்கைகள்

குழு வேலை (Team Work) மூலம் தலைமைத்துவம் (LearderShip) மற்றும் ஒத்துழைப்புத் திறன் வளர்கின்றது. குழுச் செயற்பாட்டின் போது ஒற்றுமை, விட்டுக் கொடுப்புடன் பொறுப்புணர்வும் ஏற்படுகின்றது. தனிநபர் மற்றும் குழு அடிப்படையிலான திறன் பேச்சு (Pubilc Speaking); மற்றும் சிந்தனையாழ்வு (Critical Thinking) பயிற்சிகளை அதிகம் கற்றுக் கொள்வதன் ஊடாக ஆளுமை விருத்தி நன்றாகவே மேம்பாடு அடைகின்றது.

### உதவும் திறன் வளர்ப்பு

முதலில் தனக்குத்தானே உதவும் திறன் உடையவராக இருத்தல் வேண்டும். தன்னை செயற்படுத்தல், கட்டுப்படுத்தல் மட்டுமன்றி தனக்குத்தானே உதவுபவராகக் காணப்படுதல் நன்றி. அத்துடன், வகுப்பறை குழுச்செயற்பாடுகளில் மாணவர்களை தமக்குத் தாமே உதவும் குழுவுடன் இணைத்தல் மூலம் இவர்களிடம் இப்பண்பு வளர்கின்றது. இதனால் ஆளுமை விருத்தி அடைகின்றது. இவ்வாறான பல்வேறுபட்ட உத்திகளின் அடிப்படையில் பாடசாலை மாணவர்களின் மத்தியில் ஆளுமை விருத்தி அடைந்து சமூகத்தில் ஆளுமை மிக்க நபராக திகழ வழிவகை செய்கின்றது.

# 8 ஆண்டுகள் கழித்தும் அடங்காத ஜீ.வி.






இயக்குநர் சண்முகம் முத்துசாமி இயக்கத்தில், ஜி.வி.பிரகாஷ், சரத்குமார் மற்றும் யோகி பாபு உள்ளிட்டவர்கள் நடிப்பில் 8 ஆண்டுகளுக்கு முன்பே நிறைவு செய்யப்பட்ட திரைப்படம் ‘அடங்காதே’.

இப்படத்தில் ஜி.வி. பிரகாஷுக்கு ஜோடியாக சுரபி, பொலிஸ் அதிகாரியாக மந்த்ரா பேடி, சரத்குமார், தம்பி ராமையா, யோகி பாபு உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இப்படத்துக்கு ஜி.வி.பிரகாஷே இசையமைத்திருந்தார்.

இந்த படம் சென்சாருக்கு சென்றபோது, படத்துக்கு அனுமதி அளிக்க சென்சார் அதிகாரிகள் மறுத்துள்ளனர். இதையடுத்து பெங்களூருக்குப் படக்குழுவினர் அனுப்பினர்.

அங்கே படம் பார்த்த அதிகாரிகள் படத்துக்கு 190 இடங்களில் கட் சொல்லியுள்ளனர். அதற்கு சம்மதிக்கா விட்டால் படத்துக்கு அனுமதி வழங்கப்படாது என அறிவித்துள்ளனர்.


இதற்குப் படக்குழு சம்மதிக்காததால் இந்தப் படம் 8 ஆண்டுகளாக ரிலீஸாகாமல் முடங்கிக் கிடந்தது. இந்நிலையில் இப்போது பிரச்சனைகள் முடிவுக்கு வந்து படம் ஆகஸ்ட் 27ஆம் திகதி ரிலீஸாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே ஜி.வி.பிரகாஷின் ‘ப்ளாக்மெய்ல்’ திரைப்படம் ஆகஸ்ட் 1ஆம் திகதி ரிலீஸாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ‘காந்தா’



தென்னிந்தியப் பிரபலமான நடிகர் துல்கர் சல்மான் நடிப்பில் உருவாகிவரும் ‘காந்தா’ திரைப்படம் செப்டெம்பர் மாதம் திரைக்கு வருகிறது.




தமிழ் சினிமாவின் முதல் சூப்பர் ஸ்டார் நடிகரான எம்.கே.தியாகராஜ பாகவதரின் வாழ்க்கை வரலாற்றுத் திரைப்படமாக இது உருவாகியுள்ளது.

செல்வமணி செல்வராஜ் இயக்கத்தில் உருவாகும் ‘காந்தா’ திரைப்படத்தில் நாயகியாக பாக்யஸ்ரீ போர்ஸும் முக்கிய கதாபாத்திரங்களில் சமுத்திரக்கனி, ‘ராணா’ டகுபதி ஆகியோர் நடித்துள்ளனர்.

இந்த நிலையில், இப்படத்தின் முன்னோட்ட வீடியோவில் கருப்பு வெள்ளை பின்னணியில் துல்கர் சல்மான் சிரிக்கும் விடியோ படத்தின் மீதான ஆர்வத்தை அதிகரிக்கச் செய்துள்ளது.



# முருகதாஸின் நம்பிக்கை

தர்பார் படத்தின் தோல்விக்குப் பிறகு மூன்று ஆண்டுகள் எந்த படமும் இயக்காமல் இருந்த இயக்குநர் ஏ.ஆர். முருகதாஸ், அதன்பின்னர் ஹிந்தி நடிகர் சல்மான் கானை வைத்து இயக்கிய ‘சிக்கந்தர்’ திரைப்படமும் படுதோல்வியடைந்து.

இதையடுத்து ஹிட் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ள அவர், தற்போது சிவகார்த்திகேயனை வைத்து மதராஸி என்ற படத்தை இயக்கி வருகிறார்.

இந்த படத்தில் ருக்மினி வசந்த், வித்யுத் ஜமால் உள்ளிட்டவர்கள் நடிப்பதுடன், அனிருத் இசையமைக்கிறார். அண்மையில் படப்பிடிப்பு நிறைவடைந்த நிலையில் தற்போது போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் நடைபெற்று வருகின்றன.

படம் செப்டெம்பர் 5ஆம் திகதி வெளியாக உள்ள நிலையில், இந்த படம் பற்றிப் பேசியுள்ள ஏ.ஆர். முருகதாஸ், மதராஸி படம் கஜினி போன்ற திரைக்கதையும், துப்பாக்கி படம் போன்ற ஆக்‌ஷன் காட்சிகளும் இருக்கவேண்டும் என்று மனதில் வைத்து எழுதப்பட்டதாகக் கூறியுள்ளார்.

அத்துடன், திரைப்படம் அவ்வாறே உருவாகியுள்ளதாகவும், மிகப்பெரிய வெற்றியைக் கொடு க்கும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.




# விக்ரமுக்கு புது ஜோடி



நடிகர் விக்ரம் நடிக்கவுள்ள புதிய படத்தில் அவருக்கு ஜோடியாக நடிகை ருக்மணி வசந்த் நடிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நடிகர் விக்ரமின் ‘வீர தீர சூரன்-2’ படத்தைத் தொடர்ந்து “மாவீரன்” இயக்குநர் மடோன் அஸ்வின் இயக்கத்தில் நடிக்க ஒப்பந்தமானார்.

ஆனால், படத்தின் எழுத்துப் பணிகள் முடிவடையாததால் படப்பிடிப்பு தள்ளிச் சென்றதால், இயக்குநர் பிரேம் குமார் படத்தில் நடிக்க உள்ளதாக அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகியுள்ளது.

96, மெய்யழகன் படத்தைத் தொடர்ந்து 96-2 படத்தை இயக்க பிரேம் குமார் திட்டமிட்டிருந்தார். ஆனால், சில காரணங்களால் அப்படம் தள்ளிப்போக, திரில்லர் கதையொன்றை எழுதினார். விக்ரம் இக்கதையில்தான் நடிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

வொஷிங்டன்

ஐரோப்பிய ஒன்றியத்துடனான

# 30% வரியை 15% ஆக குறைத்தது அமெரிக்கா

ஐரோப்பிய ஒன்றியத்துடன் வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் இறக்குமதி பொருட்கள் மீதான வரி 15 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியம் பொருட்களுக்கு அமெரிக்கா 30 சதவீத வரியை விதிப்பதாக குறிப்பிட்டு இருந்தது. தற்போது அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும் ஒரு புதிய வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் பின்னர் 15 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஆணைக்குழுவின் தலைவர் உர்சுலா வொன்டெர்லேயன் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆகியோருக்கு இடையிலான பேச்சுவாரத்தை ஸ்கொட்லாந்தில்



திங்கட்கிழமை(28) அன்று நடைபெற்றது. இந்த கலந்துரையாடலுக்கு பின்னரே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கு ஈடாக, ஐரோப்பிய ஒன்றியம் அமெரிக்க எரிசக்தி பொருட்கள் மற்றும் இராணுவ உபகரணங்களை அதிக அளவில் வாங்க ஒப்புக்கொண்டுள்ளது.

இது குறித்து ஜனாதிபதி ட்ரம்ப் கூறியதாவது, இது மிகவும் சக்திவாய்ந்த ஒப்பந்தம். இது அனைத்து ஒப்பந்தங்களிலும் மிகப்பெரியது.

ஐரோப்பிய ஒன்றியம் அமெரிக்காவிலிருந்து 750 பில்லியன் டொலர் மதிப்புள்ள எரிசக்தியை வாங்க ஒப்புக்கொண்டுள்ளது.

அவர்கள் ஏற்கெனவே முதலீடு செய்வதை விட 600 பில்லியன் டொலர் அதிகமாக அமெரிக்காவில் முதலீடு செய்ய சம்மதம் தெரிவத்துள்ளனர் என கூறினார்.

காசா

# தினமும் 10 மணி நேர போர் நிறுத்தம்

போதிய உணவு கிடைக்காமல் காசாவில் பட்டினி பிரச்சினை பெரிய அளவில் உருவெடுத்துள்ளதால், இஸ்ரேலுக்கு சர்வதேச அளவில் அழுத்தம் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து, காசா சிட்டி, டெய்ர் அல்-பலாஹ் மற்றும் முவாசி ஆகிய மக்கள் அடர்த்தி நிறைந்த மூன்று பகுதிகளில் தினமும் காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை 10 மணி நேரம் போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளது.

உணவு, மருந்து மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களை தினமும் காலை 6 மணி முதல் இரவு 11 மணி வரை இந்த வழித்தடங்கள் வழியாக எடுத்துச் செல்லலாம் மற்ற பகுதிகளில், வழக்கம் போல் தாக்குதல்கள் தொடரும்.



மறு அறிவிப்பு வரும் வரை இது அமலில் இருக்கும். காசாவில் மாவு, சர்க்கரை, மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு பொருட்கள் அடங்கிய பைகளை வான்வழியாக வீசியதாகவும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

மேலும், ஜோர்டனும் ஐக்கிய அரபு அமீரகமும், வான்வழியில் உதவிப் பொருட்களை போடுவதற்கு ஏதுவாக இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இமாச்சல்


வெள்ளத்தில் மீட்கப்பட்ட நீதிகா:

# மாநிலத்தின் குழந்தையாக அறிவிப்பு

இமாச்சலப் பிரதேசத்தில் ஏற்பட்ட கடுமையான வெள்ளப்பெருக்கில் மீட்கப்பட்ட 10 மாதக் நீதிகா என்ற குழந்தையை, மாநிலத்தின் குழந்தையாக அரசு அறிவித்து, அவரது வாழ்க்கை, கல்வி என அனைத்துக்கும் அரசே பொறுப்பேற்பதாக அறிவித்துள்ளது.

தல்வாரா கிராமத்தில் ஜூன் 30 மற்றும் ஜூலை 1ஆம் திகதி நேரிட்ட பயங்கர வெள்ளத்தின்போது, தனது பெற்றோர் மற்றும் பாட்டியை இழந்த இந்தக் குழந்தை மீட்புப் படையினரால் மீட்கப்பட்டிருந்தது.

இந்தக் குழந்தையின் தந்தை ரமேஷ் பலியான நிலையில், அவரது தாய் ராதா, பாட்டியின் நிலை என்னவானது என்பது



இதுவரை தெரியவில்லை. அவர்கள் இதுவரை திரும்பாத நிலையில் உடலும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில், இமாச்சல மாநிலத்தின் முதல்வர் சுக்-ஆஷ்ரய் யோஜனா திட்டத்தின் கீழ், நீதிகா, மாநிலத்தின் குழந்தையாக அறிவிக்கப்பட்டார்.

இந்தக் குழந்தையை வளர்த்தெடுப்பது, கல்வி மற்றும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவது மாநிலத்தின் கடமை என்று அரசு சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

பீகார்

# ரூ.70,000 கோடி அரசு நிதி முறைகேடு

இந்திய பீகார் மாநிலத்தில் 2016-17 முதல் 2023-24க்குள் பல திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூ.70,878 கோடி இந்திய ரூபாய் முறைகேடு என புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பீகாரின் 2023-24-க்கான தலைமை கணக்கு தணிக்கை அதிகாரி அறிக்கையில் முறைகேடு குறித்து பரபரப்பு தகவல் வெளியாகியுள்ளது.

துறைவாரியாக பணிகளுக்கு பெற்ற நிதி, செலவினம் தொடர்பான அறிக்கை சிஏஜியிடம் தாக்கல் செய்ய வேண்டும்.

நிதிஒதுக்கி 18 மாதத்துக்குள் செய்ய வேண்டிய பணி முடிப்பு, நிதி செலவின அறிக்கை தாக்கலாகவில்லை என சிஏஜி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து எதிர் இந்தியா:

# வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த 4ஆவது டெஸ்ட்



இங்கிலாந்து, இந்திய அணிகளுக்கிடையிலான மன்செஸ்டரில் புதன்கிழமை (23) ஆரம்பித்து ஞாயிற்றுக்கிழமை (27) அன்று முடிவுக்கு வந்த நான்காவது டெஸ்ட் போட்டியானது வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

இந்தியா: 358/10 (துடுப்பாட்டம்: சாய் சுதர்ஷன் 61, யஷஸ்வி ஜைஸ்வால் 58, றிஷப் பண்ட் 54, லோகேஷ் ராகுல் 46, ஷர்துல் தாக்கூர் 41, வொஷிங்டன் சுந்தர் 27 ஓட்டங்கள். பந்துவீச்சு: பென் ஸ்டோக்ஸ் 5/72, ஜொஃப்ரா ஆர்ச்சர் 3/73, லியம் டோஸன் 1/45, கிறிஸ் வோக்ஸ் 1/66)

இங்கிலாந்து: 669/10 (துடுப்பாட்டம்: ஜோ றூட் 150, பென் ஸ்டோக்ஸ் 141, பென் டக்கெட் 94, ஸக் குறோலி 84, ஒலி போப் 71, பிறைடன் கார்ஸ் 47, லியம் டோஸன் 26 ஓட்டங்கள். பந்துவீச்சு: இரவீந்திர ஜடேஜா 4/143, வொஷிங்டன் சுந்தர் 2/107, ஜஸ்பிரிட் பும்ரா 2/112, அன்ஷுல் கம்போஜ் 1/89, மொஹமட் சிராஜ் 1/140)

இந்தியா: 425/4 (துடுப்பாட்டம்: இரவீந்திர ஜடேஜா ஆ.இ 107, ஷுப்மன் கில் 103, வொஷிங்டன் சுந்தர் ஆ.இ 101, லோகேஷ் ராகுல் 90 ஓட்டங்கள். பந்துவீச்சு: கிறிஸ் வோக்ஸ் 2/67, பென் ஸ்டோக்ஸ் 1/33, ஜொஃப்ரா ஆர்ச்சர் 1/78)

போட்டியின் நாயகன்: பென் ஸ்டோக்ஸ்.

இங்கிலாந்துக்கு எதிரான ஐந்தாவது டெஸ்டுக்கான

# இந்தியக் குழாமில் பண்டைப் பிரதியிட்ட ஜகதீசன்



இந்தியக் குழாமுக்கு முதற்தடவையாக விக்கெட் காப்பாளர் நாரயண் ஜகதீசன், இங்கிலாந்துக்கு எதிரான ஐந்தாவது டெஸ்டுக்கு முன்பதாக அழைக்கப்பட்டுள்ளார்.

வலது பாதத்தை முறித்துக் கொண்ட றிஷப் பண்டை 29 வயதான ஜகதீசன் பிரதியிட்டுள்ளார்.

இதேவேளை நான்காவது டெஸ்டில் உபாதை, காயம் காரணமாக தெரிவுக்குத் தயாரில்லாமலிருந்த வேகப்பந்துவீச்சாளர்களான ஆகாஷ் டீப், அர்ஷ்டீப் சிங் ஆகியோர் முழுமையாகக் குணமடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

# அறுகம்பே அரை மரதன் ஓட்டம்




■ நியாஸ் ஆதம்

அறுகம்பே பிரதேசத்துக்கு வருகைதரும் சுற்றுலா பயணிகளின் நலன்கருதி அறுகம்பே அபிவிருத்தி மன்றம் ஏற்பாடு செய்துள்ள அறுகம்பே அரை மரதன் ஓட்டமானது ஆகஸ்ட் மாதம் 10ஆம் திகதி நடைபெறவுள்ளதாக மன்றத்தின் தலைவர் இஸட்.எம். ஹாஜித் தெரிவித்தார்.

குறித்த போட்டி தொடர்பான அறிமுக நிகழ்வும் ஊடகவியாளர் சந்திப்பும் சனிக்கிழமை(26) அன்று நடைபெற்றபோதே ஹாஜித் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஹாஜித் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், "ஒன்றாக ஓடி ஒன்றாக எழுவோம் எனும் தொனிப்பொருளில் இடம்பெறவுள்ள சர்வதேச தரத்திலான இந்த மரதன் ஓட்டப் போட்டியில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மரதன் ஓட்ட வீரர்கள் என சுமார் 300 பேர் பங்குபற்றவுள்ளனர். விசேடமாக மரதன் மற்றும் நெடுந்தூர ஓட்டங்களில் பிரசித்தி பெற்ற தென்னாபிரிக்கா, கென்யா போன்ற நாடுகளில் இருந்தும் பல வீரர்கள் முற்கூட்டியே பதிவுகளை செய்துள்ளனர். அந்தவகையில் இதுவரை 14 நாடுகளிலிருந்து 60 வெளிநாட்டு வீரர்களும், உள்நாட்டைச் சேர்ந்த 120 வீரர்களும் இணையவழியூடாக பதிவுகளைச் செய்துள்ளனர். மேலும், இந்த மரதன் ஓட்டப் போட்டியில் பங்கேற்குமாறு உள்நாட்டு, வெளிநாட்டு வீரர்களுக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

இந்தப் போட்டியில் கலந்துகொண்டு வெற்றிபெரும் வீரர்களுக்கு பெறுமதியான பணப்பரிசில்களும், பதக்கம் மற்றும் சான்றுதழ்களும் வழங்கப்படவுள்ளது என்றார்.

# மியூனிச்சில் இணையவுள்ள டியஸ்

ஜேர்மனிய பெண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பயேர்ண் மியூனிச்சில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான லிவர்பூலின் முன்களவீரரான லூயிஸ் டியஸ் இணையவுள்ளார்.

லிவர்பூலுடன் 65.5 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ஸ்கள் ஒப்பந்தத்துக்கு லிவர்பூலுடன் மியூனிச் இணங்கிய நிலையிலேயே மியூனிச்சில் 28 வயதான டியஸ் இணையவுள்ளார்.

போர்த்துக்கல் கழகமான போர்ட்டோவிலிருந்து 2022ஆம் லிவர்பூலில் இணைந்த டியஸ், லிவர்பூலில் 148 போட்டிகளில் 41 கோல்களைப் பெற்றிருந்தார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 29, ஜூலை 2025, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.